IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.34/2014**

Deposition of witness for the Plaintiff/PW1

Name :R.Saraswathi Date: 30.01.2023

Husband's Name :K.Suresh

**7 முதல் 9 மற்றும் 11 பிரதிவாதிகளின் தரப்பின் குறுக்கு விசாசணை**

சுப்பையா நாயுடுவின் தகப்பனாரின் பெயர் வெங்கட சுவாமி. வெங்கட சுவாமி இறப்பதற்கு முன்னர் ஏதாவது சொத்தை விட்டு சென்றாரா என்றால் ஆம். எனக்கு தெரிந்து அவருக்கு பெருமாளரகரத்தில் சொத்து இருந்தது. அதற்கான ஆவண ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வெங்கட சுவாமி எந்த சொத்தையும் விட்டு செல்லவில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக நான் சொத்து இருந்தது என்று பொய்யாக சொல்லிகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இறக்கும் போது எனது வயது சுமார் 16 இருக்கும். சுப்பையா நாயுடு இறக்கும் போது எனது வயது சுமார் 22 இருக்கும். சுப்பையா நாயுடு ஸ்ரீ விஸ்வ ஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வந்தார். எனது தாத்தாவான சுப்பையா நாயுடுவின் அண்ணனான ஆதிநாராயணனின் மகனான பாபு நாயுடு அந்த நிறுவனத்தின் பங்குதாரராக ஒரு காலத்தில் இருந்தார் என்று நான் கேள்விப்பட்டேன். பாபு நாயுடு 1970ல் அந்த நிறுவனத்தின் பங்குதாரர் நிலையில் இருந்து விலகி சென்றுவிட்டார். அதன் பின்னர் 1978ஆம் வருடத்தில் சுப்பையா நாயுடுவின் மகன்களை அவர் அந்நிறுவனத்தில் பங்குதாரர்களாக சேர்த்துக் கொண்டார். எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட முறையில் அந்த நிறுவனத்திலிருந்து வருமானம் வந்தது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பங்குதாரர் என்ற முறையில் அப்போதைக்கு அப்போது அந்நிறுவனத்திலிருந்து வருமானம் பெற்று வந்தார் என்றால் சரியல்ல. சென்னை அமைந்தகரையில் உள்ள வணிக கட்டிடம் சுப்பையா நாயுடுவின் மகன்கள் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அது குடும்ப வருமானத்திலிரருந்து வாங்கப்பட்டது. வருடா வருடம் எனது தகப்பனார் வருமான வரி கணக்கு

தாக்கல் செய்து வந்தாரா என்று எனக்கு சரிவர தெரியவில்லை. 2009லிருந்து அமைந்தகரையில் உள்ள வணிக கட்டிடம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் ஆகியவற்றில் உள்ள குடியிருப்பு பகுதியில் குடியிருந்து வருகிறேன். 2008 ஜனவரி வரை பெருமாள் அகரத்திலுள்ள வீட்டில் நாங்கள் அனைவரும் குடியிருந்து வந்தோம். சுப்பையா நாயுடு தனியாகவும் அவரது பிள்ளைகள் தனித்தனியாகவும் குடியிருந்து வந்தார்கள் என்றும் சேர்ந்து இருந்து வந்ததாக வேண்டுமென்றே இந்த வழக்கிற்காக சொல்லிகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரத்தை பதிவு செய்ய நானும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அந்த பத்திரத்தை மூர்த்தி, தினகர் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோர் ஏற்பாடு செய்து கொண்டு வந்தார்கள். அது எங்கே தட்டச்சு செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை நான் படித்து பார்த்தேன். அந்த பத்திரத்தை யார் தயார் செய்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. எல்லோரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையொப்பமிட்டோம். சாட்சிகளாக யார் யார் இருந்தார்கள் என்பது எனக்கு சரியாக ஞாபகமில்லை. அந்த பாகபிரிவினை பத்திரத்தின் நகலை நான் வாங்கி வைத்துக் கொண்டேனா என்றால் நான் வாங்கவில்லை. வேறுயாரும் நகலை வாங்கி வைத்துக் கொண்டனரா என்று எனக்கு தெரியவில்லை. சுப்பையா நாயுடு பெயரில் உள்ள சொத்துக்கள் மட்டும் பாகப்பிரிவினை பத்திரத்தில் இடம் பெற்றுள்ளதா என்றால் இல்லை. 2009ல் பதிவு செய்யப்பட்ட பத்திரம் 2010வரை பதிவு அலுவலகத்தில் நிலுவையில் இருந்தது. அந்த பத்திரத்தை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து திரும்ப பெற்றுக் கொண்டது யார் என்றால் விசாரணை செய்ததில் தினகர் பெற்றுக் கொண்டதாக தெரிய வந்தது. பதிவு அலுவலகத்தில் விசாரணை செய்த போது அந்த தகவல் தெரிய வந்தது. எனது சித்தி சுலோச்சனா உட்பட நிறைய பேர் அந்த தகவலை சொன்னார்கள். எனது தாயார் அந்த பத்திரத்தை பெற்றுக் கொண்டதாக பதிவு உள்ளது என்றால் சரிதான். அந்த பதிவை நான் பார்த்தேன். பத்திரத்தை திரும்ப பெற்றுக் கொள்வதற்கு கொடுக்கப்பட்ட மனுவில் ஐந்து பேர் கையொப்பம் போட்டிருந்தார்கள். அந்த ஐந்து நபர்களின் பெயர் விஜயா, சுலோச்சனா, சாந்தி, சுகந்தி மற்றும் வனஜா. அந்த கையொப்பங்களை அவர்கள் போடவில்லை என்று எனது தாயார் ஒரு புகார் கொடுத்தார். அது சம்பந்தமாக விசாரணையில் மாவட்ட பதிவாளர் அனைவரையும் ஆஜராக சொல்லி அறிவிப்பு அனுப்பியிருந்தார். எனக்கு அந்த அறிவிப்பு வரவில்லை. எனது தாயார் அந்த விசாரணையில் கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பு எனது

தாயாருக்கு தாமதமாக கிடைத்தது. அது குறித்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். மாவட்ட பதிவாளருக்கு இது சம்பந்தமாக மனு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. அவர் மீது நம்பிக்கை இல்லாததன் காரணமாக நீதிமன்றத்திற்கு சென்றோம். மாவட்ட பதிவாளரின் விசாரணையில் நம்பிக்கை இல்லை என்று மேல் அதிகாரிகளுக்கு மனு அனுப்பி உள்ளேனா என்றால் ஆம். விசாரணையில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்று மாவட்ட பதிவாளர் அனுப்பிய அறிக்கை எனக்கு வந்ததா என்றால் எனக்கு ஞாகபமில்லை. வா.த.சா.44 பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்துள்ளேன். அதில் கையொப்பம் இல்லை. பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட பத்திரத்தின் உண்மை நகல் வா.த.சா.44 அல்ல என்றால் சரியல்ல. தினகர் பதிவு அலுவலகத்திலிருந்து பத்திரத்தை திரும்ப பெற்றதை யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஏதோ உள்நோக்கத்தோடு அபாண்டமாக தினகர் மீது பழி போடுகிறேன் என்றால் சரியல்ல. நொளம்பூரில் உள்ள சொத்து கோவிந்தசாமி பெயரில் ஒத்துக்கீடு உள்ளது. அவர் அதற்கான தவணைகளை கட்டியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. கோலடி கிராமத்தில் உள்ள சொத்து கடனின் பெயரில் வாங்கப்பட்டதா ரொக்கத்தின் பெயரில் வாங்கப்பட்டதா என்றால் கடன் பெயரில் வாங்கப்பட்டது. அந்த சொத்தை எனது தாத்தா சுப்பையா நாயுடு தான் வாங்கினார். அதை கோவிந்தசாமி தவணை முறையில் தான் வாங்கினார். பின்னிட்டு அனைத்து தவணைகளையும் அவர் தான் கட்டினார் என்றும் சொன்னால் சரியல்ல. ஏ அட்டவணையில் 7ஆம் ஐடம் சொத்து ஆதிநாராயணன் குடும்ப சொத்து என்றும் எங்கள் குடும்ப சொத்து அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. டி அட்டவணை 2ஆம் ஐடம் சொத்து பாபு நாயுடு என்பவருக்கு சொந்தம் என்றும் சுப்பையா நாயுடுவிற்கு சொந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் யார் யாருக்கு சொந்தமானது என்பது எனக்கு தெரியாமல் அனைத்தும் குடும்ப சொத்து என்று உள்நோக்கத்தோடு சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அமைந்தகரையில் உள்ள வணிக கட்டிடத்தில் தரைதளத்தில் 8 கடைகள் இருக்கும் என்றால் இருக்காலம். முதல் தளத்தில் 9 கடைகள் உள்ளது என்றால் 6-7 கடைகள் இருக்கும். முதல் தளத்தில் 3 குடியிருப்பு பகுதிகள் உள்ளது. இரண்டாம் தளத்தில் 3 குடியிருப்பு பகுதிகள் உள்ளது. ஒவ்வொரு கடைக்கும் மாத வாடகை ரூ.15,000 என்றும் ஒவ்வொரு குடியிருப்பு பகுதிக்கும் மாத வாடகை ரூ.20,000 என்றும் சொன்னால் சரியல்ல. வாடகை பெற்றுக் கொள்வதற்கு ரசீது கொடுக்கும் பழக்கம்

உண்டா என்றால் இல்லை. வாடகை அக்கௌன்டில் வருகிறது. உண்மையான வாடகையை மறைக்கும் உண்ணத்தில் நான் மேற்கூறியவாறு பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

( பிரதிவாதிகள் 10 மற்றும் 12 முதல் 16 தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது).